**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**
**C.C. No: 185/2025**
**Dated: 01.06.2026**
**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.உதயகுமார்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 2வது எதிரி ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon’ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**(சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய சாட்சி அனுமதிக்கப்பட்டார்.)**

## எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ரயில்வே ஸ்டேசன் என்று சொன்னால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நிறைய பேர் வந்து சென்று கொண்டிருந்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரித்து வாக்குமூலங்கள் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் எதிரிக்கு உள்ள உரிமையை அவர்கள் மொழியில் எடுத்துசொல்லி மொழிப்பெயர்ப்பாளர் சோதனை சம்மத கடிதத்தில் மொழி

பெயர்த்து கூறியதாக கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இந்தி ஆசிரியல் தாமோதரன் மொழிப்பெயர்ப்பாளராக நியமனம் செய்ததாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மொழிப்பெயர்ப்பாளர் தாமோதரனுக்கு ஒடிசி மொழி தெரியுமா , தெரியாதா என்று எனக்கு தெரியாது. எதிரிகளுக்கு ஒடிசி மொழியை தவிர வேறு மொழி தெரியாது என்றும் உரிய மொழிப்பெயர்ப்பாளரை நியமிக்கவில்லை என்றால் சரியல்ல. NDPS Act ன்படி எதிரிக்கு உள்ள உரிமையை அவர்களுடைய மொழியில் சரிவர எடுத்து சொல்லவில்லை என்றும், அவர்களுடைய உரிமை மறுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சோதனை சம்மத கடிதத்தில் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அல்லது நீதித்துறை நடுவர் முன்பாகவோ எதிரியாகிய உமக்கு சோதனை செய்ய உரிமை உள்ளது என்ற உரிமையை அவர்களுடைய மொழியில் எடுத்து சொல்லி புரிய வைக்காத காரணத்தால் அவர்களுடைய உரிமை மறுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அத்தாட்சி , கைது குறிப்பானை, ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை தமிழில் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணங்களில் முறையான மொழிப்பெயர்ப்பாளரை நியமனம் செய்து ஆவணங்களில் அவர் படித்து காண்பித்ததாக கையொப்பம் எதுவும் பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகள் எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால்

சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் தனித்தனியாக 11.200கி.கி இரண்டு எதிரிகளிடமிருந்து தனித்தனியாக கைப்பற்றப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு தான் 1ம் எதிரியிடமிருந்து அவர் வைத்திருந்த 11.200 கி.கி கஞ்சாவையும், 2வது எதிரியிடமிருந்து அவர் வைத்திருந்த 11.200 கி.கி கஞ்சாவையும், காவல் ஆய்வாளர் தனித்தனியாக கைப்பற்றினார் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றும், அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் தயார் செய்து கையொப்பம் செய்து விட்டு மொழி தெரியாத நபர்கள் மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. மேலதிகாரிகள் என்னிடம் கேட்டு கொண்டதற்கு இணங்க ஆவணங்களில் கையொப்பம் செய்து விட்டு அதற்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புள்ளிவிபர கணக்கிற்காக வழக்கு தாக்கல் செய்துவிட்டு எதிரிகளை தண்டிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தற்சமயம் பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 185/2025**

**Dated: 01.06.2026**

**Deposition of Witnesses for PW - 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.குமார்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 2வது எதிரி ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**(சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய சாட்சி அனுமதிக்கப்பட்டார்.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ரயில்வே ஸ்டேசன் என்று சொன்னால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நிறைய பேர் வந்து சென்று கொண்டிருந்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரித்து வாக்குமூலங்கள் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் எதிரிக்கு உள்ள உரிமையை அவர்கள் மொழியில் எடுத்துசொல்லி மொழிப்பெயர்ப்பாளர் சோதனை சம்மத கடிதத்தில் மொழி

பெயர்த்து கூறியதாக கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இந்தி ஆசிரியல் தாமோதரன் மொழிப்பெயர்ப்பாளராக நியமனம் செய்ததாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மொழிப்பெயர்ப்பாளர் தாமோதரனுக்கு ஒடிசி தெரியுமா , தெரியாதா என்று எனக்கு தெரியாது. எதிரிகளுக்கு ஒடிசி மொழியை தவிர வேறு மொழி தெரியாது என்றும் உரிய மொழிப்பெயர்ப்பாளரை நியமிக்கவில்லை என்றால் சரியல்ல. NDPS Act ன்படி எதிரிக்கு உள்ள உரிமையை அவர்களுடைய மொழியில் சரிவர எடுத்து சொல்லவில்லை என்றும், அவர்களுடைய உரிமை மறுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சோதனை சம்மத கடிதத்தில் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அல்லது நீதித்துறை நடுவர் முன்பாகவோ எதிரியாகிய உமக்கு சோதனை செய்ய உரிமை உள்ளது என்ற உரிமையை அவர்களுடைய மொழியில் எடுத்து சொல்லி புரிய வைக்காத காரணத்தால் அவர்களுடைய உரிமை மறுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அத்தாட்சி , கைது குறிப்பானை, ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை தமிழில் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணங்களில் முறையான மொழிப்பெயர்ப்பாளரை நியமனம் செய்து ஆவணங்களில் அவர் படித்து காண்பித்ததாக கையொப்பம் எதுவும் பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகள் எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

கைப்பற்றுதல் மகஜரில் தனித்தனியாக 11.200கி.கி இரண்டு எதிரிகளிடமிருந்து தனித்தனியாக கைப்பற்றப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு தான் 1ம் எதிரியிடமிருந்து அவர் வைத்திருந்த 11.200 கி.கி கஞ்சாவையும், 2வது எதிரியிடமிருந்து அவர் வைத்திருந்த 11.200 கி.கி கஞ்சாவையும், காவல் ஆய்வாளர் தனித்தனியாக கைப்பற்றினார் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றும், அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் தயார் செய்து கையொப்பம் செய்து விட்டு மொழி தெரியாத நபர்கள் மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. மேலதிகாரிகள் என்னிடம் கேட்டு கொண்டதற்கு இணங்க ஆவணங்களில் கையொப்பம் செய்து விட்டு அதற்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புள்ளிவிபர கணக்கிற்காக வழக்கு தாக்கல் செய்துவிட்டு எதிரிகளை தண்டிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தால் தற்சமயம் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.